**நாரம்மல பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 03 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 16 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நாரம்மல பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொண்ட கடனுக்காக மீளாய்வாண்டின் நான்காம் காலாண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 495,296 ஆன வட்டி 2016 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதி மீளாய்வாண்டின் செலவினம் வருமானம் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 33,467 ஆன முத்திரைக் கட்டணக் கொடுப்பனவின் போது தவறுதலாக முத்திரைக் கட்டண கடன்கொடுத்தோர் கணக்கிற்குப் பதிலாக சாதாரண கடன்கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைத்தலை சரிசெய்வதற்காக 63 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் கடன்கொடுத்தோர் கணக்கிற்குப் பதிலாக திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) பொதுக் கணக்கிலிருந்து உட்கட்டமைப்பு வசதிகள் கணக்கிற்கு பணத்தை மாற்றும் போது முற்பணமாக கணக்கீடு செய்யப்படாத ரூபா 4,446 ஆன தொகை 70 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் பொதுக் கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 3,200 ஆன முன்னைய ஆண்டிற்குரிய முற்பணத் தொகை கொடுப்பனவினை திருத்துவதற்காக 71 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் ரூபா 4,900 ஆன சீமெந்து பிலொக் கற்கள் கொள்வனவு செய்வதற்கான செலவினம் 2016 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்குரிய செலவினக் கணக்கிலும் கடன்கொடுத்தோர் கணக்கிலும் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) முன்னைய ஆண்டிற்குரியதாக இருந்த போதிலும், அவ்வாண்டில் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படாத காரணத்தினால் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 245,993 தொகை ஆண்டின் செலவினமாக கருதி கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பி.ச. 07 மற்றும் பி.ச 19 மாதிரி பயன்படுத்தப்படாமல் இறுதி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 03 கணக்கு விடயங்களுக்குரிய காணப்பட்ட மீதிகள் மற்றும் தொடர்புடைய துணைப் பதிவேடு இடையே ரூபா 163,341 ஆன இணக்கமின்மை காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

(அ) 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 21,312,454 ஆக இருந்ததுடன், அவற்றில் நீண்டகாலமாக இருந்து வரும் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாத ரூபா 10,000 ஆன சபையினால் வைப்புச் செய்யப்பட்ட மீதியொன்றும் 03 ஆண்டுகளுக்கு மேல் அறவிடப்பட வேண்டிய ரூபா 120,641 ஆன மீதியொன்றும் காணப்பட்டன.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 17,392,916 ஆக இருந்ததுடன், ஒரு வருடத்தை விட கூடிய காலம் முதல் தீர்க்கப்பட வேண்டிய ரூபா 9,132,202 ஆன கடன் மீதியும் அதில் காணப்பட்டது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் சபையில் 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 548,419 கூட்டுத்தொகையான 33 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,721,080 ஆக காணப்பட்டதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செலவினத்தை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 6,344,444 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,623,364 ஆன வீழ்ச்சியொன்று காணப்பட்டது. இந் நிதி விளைவிற்கு ரூபா 21,365,782 தொகையான மூலதன உதவி மற்றும் ரூபா 24,056,922 ஆன மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 1,929,940 ஆன மிகையொன்றாக மாறியுள்ளது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | 2015 | 2014 | முரண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | வருமானம் | | | | செலவினம் | | |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் | 22,658 | 25,697 | (3,039) | தனிப்பட்ட வேதனம் | 54,524 | 40,713 | 13,811 |
| (ii) | ஏனையவை | 65,637 | 52,159 | 13,478 | ஏனையவை | 29,049 | 30,799 | (1,750) |
| | உப மொத்தம் | 88,295 | 77,856 | 10,439 | உப மொத்தம் | 83,573 | 71,512 | 12,061 |
| (iii) | மூலதன வருமானம் | 21,266 | 189,534 | (168,268) | மூலதன செலவினம் | 24,057 | 193,015 | (168,958) |
| | மொத்தம் | 109,561 | 267,390 | 157,829 | மொத்தம் | 107,630 | 264,527 | 156,897 |
| | செயற்பாட்டு விளைவு | 4,721 | 6,344 | (1,623) | மிகை / பற்றாக்குறை | 1,930 | 2,863 | (933) |

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 88,294,306 தொகையில் 71 சதவீதம் ரூபா 62,970,388 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினால் அடங்கியுள்ளது. மூலதன வருமானமாகிய ரூபா 21,265,782 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணமாகும்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினமான ரூபா 83,573,225 தொகையில் 65 சதவீதமான ரூபா 54,524,129 தொகை தனிப்பட்ட சம்பளங்களுக்கான செலவினமாக இருந்ததுடன், அவற்றில் அண்மித்த 84 சதவீதமான ரூபா 45,978,172 ஆன சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மூலதனச் செலவினமான ரூபா 24,056,921 தொகையில் 20 சதவீதமான ரூபா 4,984,733 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தததுடன் எஞ்சிய 80 சதவீதமான ரூபா 19,072,188 தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்களின் பேரில் வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களாகும்.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குறை | மதிப்பிடப் பட்டது | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 5,885 | 4,794 | 1,331 | 4,736 | 4,733 | 1,180 |
| (ii) குத்தகை வாடகை | 21,834 | 13,830 | 246 | 16,486 | 16,207 | 186 |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 2,206 | 3,877 | - | 1,658 | 1,658 | - |
| (iv) ஏனைய வருமானம் | 61,993 | 61,792 | 11,506 | 48,676 | 48,837 | 12,217 |
| | 91,918 | 84,293 | 13,083 | 71,556 | 71,435 | 13,583 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆதனவரி மற்றும் வரிகளின் கீழ் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 5,885,500 ஆன வருமானம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 4,794,355 என 81 சதவீதமே அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 1,331,813 ஆன நிலுவையொன்று காணப்பட்டதுடன் அது வருடாந்த பட்டியலிடலில் 27 சதவீதமாக இருந்தது.

(இ) குத்தகை வாடகையின் கீழ் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 21,834,000 ஆன வருமானம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 13,830,463 என 63 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 246,796 ஆன நிலுவையொன்று காணப்பட்டதுடன் அது வருடாந்த பட்டியலிடலில் 1.1 சதவீதமாக இருந்தது.

### 2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | | | | வருமான சேகரித்தல் | | | நிலுவை மீதி | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப் பட்ட வருமானத்தில் | மொத்தம் | 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப் பட்ட வருமானத்தில் | 2015/12/31 இல் நிலுவை கணிப்பீட்டின் பிரகாரம் | 2015/12/31 உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா.000 | ரூபா000 | ரூபா. 000 | ரூபா000 | ரூபா 000 | ரூபா000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரி மற்றும் வரி | 1,292,952 | 4,458,430 | 5,751,382 | 877,533 | 4,312,057 | 5,189,590 | 415,419 | 146,373 | 561,792 | 1,331,813 |
| வாடகை | 188,368 | 10,217,438 | 10,405,806 | 184,968 | 9,891,524 | 10,076,492 | 3,400 | 325,914 | 329,364 | 246,796 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | - | 2,552,576 | 2,552,576 | - | 2,552,576 | 2,552,576 | - | - | - | - |
| ஏனைய வருமானம் | 12,217,080 | 596,810 | 12,813,890 | 12,217,080 | 3,720,299 | 15,937,379 | - | - | - | 11,506,750 |
| மொத்தம் | 13,698,400 | 17,825,254 | 31,523,654 | 13,279,581 | 20,476,456 | 33,756,037 | 418,819 | 472,287 | 891,156 | 13,085,359 |

* சபையின் வருமான பதிவேடுகளை பேணிச்செல்வதில் குறைபாடுகள் காரணமாக கணிப்பிடலின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை மீதிகளில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதிகளுடன் இணங்கவில்லை.

### 2.3.3 வருமான நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நாரம்மல பிரதே சபை அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 15 தொலை தொடர்பாடல் கோபுரங்களுக்காக 2015 ஆம் ஆண்டில் வியாபார அனுமதிப்பத்திர வருமானம் அல்லது வியாபார வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சபைக்கு ரூபா 45,000 ஆன அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபையின் 2012/2013 ஆம் ஆண்டுகளில் குத்தகை வழங்க முடியாதிருந்த 09 சொத்து விடயங்கள் காணப்பட்டதுடன் வருடக் கணக்காக இச்சொத்துக்களிலிருந்து எவ்வித வருமானமும் உழைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே குத்தகைக்கு வழங்கக்கூடிய நிலைமைக்கு ஆதனங்களை அபிவிருத்தி செய்வதற்கோ அல்லது ஆதனங்களிலிருந்தான வருமானத்தை உழைப்பதற்கோ சபையினால் மீளாய்வாண்டு வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குரிய நாரம்மல சனசமூக மண்டபம் 2014 திசெம்பர் 26 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் அறவிடப்படாமல் 24 சந்தர்ப்பங்களில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் சபைக்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 117,000 ஆக இருந்தது.

### 2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 940,034 தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 10,566,716 ஆக இருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டின் சபையின் 06 பதவிகளில் 08 வெற்றிடங்களும் 13 பதவிகளில் 26 மிகைகளும் காணப்பட்டன.

(ஆ) சபின் கடமைகளை கையளிப்பு பரிசோதனையின் போது குறிப்பிட்ட பதவிகளுக்குரிய கடமைகள் கையளிக்கப்படாதிருந்த 15 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### 3.2 செயற்பாட்டு திறமையின்மை

சபை அதிகாரப் பிரதேசத்தில் 13 தொடர்பாடல் கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அனைத்து நிர்மாணங்களுக்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டோ அல்லது இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளல் இடம்பெறாதிருந்துடன் அதற்காக சபையின் கவனமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

தெலிகுண அங்க சிகிச்சை நிலையத்திற்கு நீர் வழங்கும் நிர்மாணத்தின் வேலை விடய இலக்கம் R-03 இன் கீழ் (1’) மி.மீ. PVC 1000 டைப் வகையில் 70 மீற்றர் குழாய் வழங்கி பொருத்துவதற்காக ரூபா 28,560 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், டைப் 600 வகை PVC குழாய்கள் பொருத்தப்பட்டிருந்தமை 2015 செப்தம்பர் 08 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 4.1.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண திட்டவட்டமான மானியங்கள் பயன்படுத்தப்பட்டு நாரம்மல நூலக கட்டிடத்தின் கூரைக்காக 2014 ஆம் ஆண்டில் அமைத்து பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 198,800 பெறுமதியான 08 வலயங்கள் 2015 ஒக்தோபர் மாதம் வரையிலும் உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாமல் சனசமூக மண்டபத்தின் கட்டிடத்தின் பின்பகுதியில் இடப்பட்டிருந்தன.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் ரூபா 265,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு கொங்கிரீட் அச்சுக்கள் இயந்திரம் மற்றும் அங்கு உற்பத்தி செய்யும் கற்களை அடுக்கி வைப்பதற்காக தயாரிக்கப்பட்ட 2’x1’ அளவிலான 360 பலகை அடுக்கிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்